29th April 1959]

SRI M. S. SELVARAJAN : மணிமுத்தாறு திட்டத்தின் சமீப கால அனுபவத்திலிருந்து புதிதாக ஏதேனும் பாசனத்திற்கு நிலம் சேர்ப்பதாக இருக்குமானால், அது இயல்பாகவே இருந்துகொண்டிருப்பதற்கு இருக்கும் நிலங்களுக்குச் சரிவர தேவையை பூர்த்தி செய்யக்கூடாத நிலைமையில் தண்ணீர் சப்ளைக்கு தடையாக இருக்கலாம் என்ற அபிப்பிராயம் நிலவுவதால், புதிதாக, சேர்ப்பதற்குமுன்பு பெட்டர்மெண்ட் டாக்ஸ் விதிப்பதற்குமுன்பு அனுமதியின் பேரில் அதிகமாக தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு வசதி செய்து, அதைப் பரிசீலனை செய்து, அதன் பின்னால் பெட்டர்மெண்ட் டாக்ஸ் போடக்கூடிய அளவு ஆயக்கட்டுதார்களைக் கேட்க அரசாங்கம் முன் வருமா ? இது போன்று ஆலோசனை ஜில்லா பிளானிங் போர்டின் அபிப்பிராயத்தைக் கேட்பதற்காக அங்கே வைக்கப் படுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

SRI G. GOMATH SANKARA DIKSHITAR : கழிந்த வருஷத்தில் மணிமுத்தாறு அணையிலிருந்து நீர் விடப்பட்டு அதன் மூலமாக பல இடங்களிலே தீர்வுகள் ஏற்பட்டன என்ற அனுபவத்தை வைத்துக் கொண்டு, மணிமுத்தாறினால் எவ்வளவு ஏக்கர்களுக்கு நீர் விடப்படலாம் என்ற முடிவை அரசாங்கம் கவனித்துக்கொள்ளுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கும் நிலங்களுக்குப் பாதகம் இல்லாமல், புதிதாக சேர்க்கப் படும் நிலங்களுக்குப் பாதகம் இல்லாமல் பரிசீலனை செய்து இந்த நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டுத்தான் மேலும் ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்வோம்.

Polytechnic for Kancheepuram

* 259 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the present stage of the proposal to start a Polytechnic at Kancheepuram?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government of India's approval is awaited.

SRI K. SATTANATHA KARAYALAR : காஞ்சீபுரம் பாலிடெக்னிக்குக்கு எவ்வளவு பணம் செலவாகியுள்ளது ? மொத்தம் எவ்வளவு பணம் தேவைப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை.

SRI J. MATHA GOWDER : காஞ்சீபாத்தில் மாணவர்களுக்கு பாலிடெக்னிக் ஒன்று ஏற்படுத்துவது போல், அங்கிருக்கும் ஒரு சிலருக்குக் கடவுள் பக்தி சொல்லிக்கொடுப்பதற்கு அங்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு ஒரு "டெக்னிக்" கண்டுபிடிக்க வேண்டும்.

MR. SPEAKER : "பாலிடெக்னிக்" என்றால், அதில் கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதுபோல் அநேக டெக்னிக்குகள் இருக்கும் என்று நினைக்கிறார் போலும் ; அதுபோல் இல்லை. (சிரிப்பு.)